**செய்தி வெளியீடு எண்: 642** **நாள்:26.09.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையிலான தமிழக அரசால், தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 14.02.2019 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில், ''தமிழ் நாட்டில் இதழியல் முன்னோடியும், இன்றைய முன்னணி நாளிதழ்களில் ஒன்றான ''தினத்தந்தி'' தமிழ் நாளிதழைத் தொடங்கி பாமரரும், பாட்டாளியும் எளிய தமிழ் மூலம் படிக்க வழிவகை செய்தவர் திரு.சி.பா. ஆதித்தனார் அவர்கள். தமிழ்நாட்டில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டப்பேரவையின் அவைத் தலைவராகவும், கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர் திரு.சி.பா.ஆதித்தனார் அவர்கள். தமிழ் ஆர்வலர்கள் அன்னாரது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாட வேண்டுமென்று விடுத்த கோரிக்கையினை ஏற்று சென்னை எழும்பூரில் அமைந்துள்ள திரு.சி.பா.ஆதித்தனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவர் பிறந்த நாளான செப்டம்பர் 27 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும்'' என்று அறிவித்ததைத் தொடர்ந்து சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது.

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் 115ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், கொண்டாடப்படும் இந்த பிறந்தநாள் விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(27.9.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

சி.பா.ஆதித்தனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் காயாமொழியில் சிவந்தி ஆதித்தர்–கனகம் அம்மையார் தம்பதியருக்கு மகனாக

1905ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் நாள் பிறந்தார். இவரது மனைவி பெயர் கோவிந்தம்மாள்.

தனது மகனையும் தன்னைப்போல வழக்கறிஞராக ஆக்க விரும்பிய சிவந்தி ஆதித்தர், சி.பா.ஆதித்தனார் அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பினார். அங்கு படிக்கும்போதே இதழியல் தொடர்பான பகுதி நேர வேலைகளைச் செய்து அனுபவம் பெற்றுள்ளார். சட்டத்துறையில் கல்விகற்ற இவர், தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட தனது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியாக பத்திரிகைத் துறையிலேயே தனது கவனத்தைச் செலுத்தினார்.

சி.பா.ஆதித்தனார் அவர்கள் 1942ஆம் ஆண்டு தமிழன் என்னும் வார இதழை முதன் முதலில் தொடங்கினார். அதே ஆண்டிலேயே நவம்பர் மாதத்தில், தினத்தந்தி என்னும் தமிழ் நாளிதழை மதுரையில் தொடங்கினார். தனது இதழியல் முயற்சிகளைத் தொடர்ந்து விரிவாக்கி வந்த ஆதித்தனார் அவர்கள், மாலை மலர் என்னும் மாலைப் பத்திரிகையையும், ராணி என்னும் வார இதழையும் தொடங்கினார். 1947ஆம் ஆண்டில் தினத்தாள் என்னும் பத்திரிகையை ஆரம்பித்து அதனைச் சேலத்தில் இருந்து வெளியிட்டார். 1948ஆம் ஆண்டு, திருச்சி, சென்னை ஆகிய இடங்களிலிருந்து முறையே தினத்தூது, தினத்தந்தி ஆகிய பத்திரிகைகள் வெளியிடப்பட்டன.

தமிழ் வளர்ச்சி, தமிழ் உணர்வு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தித் தனது பத்திரிகைகளில் செய்திகளையும், பல்வேறு அம்சங்களையும் வெளியிட்டு வந்த ஆதித்தனார் அவர்கள், அக்காலத்தில் நிலவிய உயர்தட்டு மக்கள் வாசிக்கும் மொழி நடையைத் தவிர்த்து, சாதாரண மக்களை முன்னிலைப்படுத்தி எளிய தமிழ் நடையைக் கையாண்டார். இதனால் பரந்த அளவில் தமிழ் நாட்டில் வாசிப்புப் பழக்கம் பரவ வழிவகுத்தார். அடிப்படையான எழுத்தறிவு பெற்றிருந்தவர்கள் மத்தியில் கூட, செய்திகளை வாசிக்கும் போக்கு வளர சி.பா. ஆதித்தனார் அவர்களின் இதழியல் முயற்சிகள் வழிவகுத்தன.

அரசியலிலும் ஆர்வம் கொண்டிருந்த சி.பா. ஆதித்தனார் அவர்கள், 1947 முதல் 1953ஆம் ஆண்டு வரை தமிழக மேலவை உறுப்பினராகவும், பின்னர் 1957 முதல் 1962ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராகவும், 1964ஆம் ஆண்டு மீண்டும் மேலவை உறுப்பினர் ஆனார். 1967ஆம் ஆண்டு சட்டப்பேரவையின் அவைத் தலைவராகவும், 1969ஆம் ஆண்டு தமிழக

கூட்டுறவுத்துறை அமைச்சராகவும் தெரிவு செய்யப்பட்டு மக்கள் பணி ஆற்றியுள்ளார். சி.பா. ஆதித்தனார் அவர்கள் தனது 76ஆம் வயதில் 1981ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி இயற்கை எய்தினார்.

தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(27.9.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**